# கேரி தமிழ்ப்பள்ளி

வடகேரொலைனா, அமெரிக்கா

https://www.carytamilschool.org

*Newsletter*

*Vol. 1*

*March 30, 2015*






**அன்பார்ந்த கேரி தமிழ்ப்பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு,**

கேரி தமிழ்ப்பள்ளி தொடங்கி, 10 ஆண்டுகள் நிறைவேறும் இந்தத் தருணத்தில், இந்த முதல் செய்தியிதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

ஐந்து மாணவர்களுடன் உருவான கேரி தமிழ்ப்பள்ளி தற்போது 230 மாணவர்களைக் கொண்டதொரு பெரிய பள்ளியாக வளர்ந்துள்ளது (மேலும் தகவல்களுக்கு பின்வரும் வரைபடத்தைப் பார்க்கவும்).

இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கும் ஒவ்வொருவரையும், குறிப்பாக பள்ளியை வாரம் தோறும் வழிமுறைப்படுத்தி, பல்வேறு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் பெற்றோர்களுக்கும், தன்னார்வலத் தொண்டு புரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.




பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பலர் திரும்ப பள்ளிக்கு வந்து இன்றைய மாணவர்களுக்கு உதவ விரும்பியுள்ளார்கள். இதுவரை மூன்று முன்னாள் மாணவர்கள் ஆர்வமுடன் பல துறைகளில் பணி செய்து வருகிறார்கள். விரைவில் சிலரை முழுநேர ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம்.

தமிழ் மொழியின் இனிமை, வளமை, பெருமைகளை நமது குழந்தைகளும் அனுபவிக்கவும், நம் கல்வியின் தரத்தினை மேலும் உயர்த்தவும், பெற்றோர்களாகிய உங்களின் தொடர்ந்த ஆதரவையும் ஊக்குதவியையும் வேண்டுகிறேன். உங்கள் பிள்ளைகளை தினமும் சில நிமிடங்களாவது தமிழில் பேசவைக்க முயற்சிக்க வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை முன்வைத்து இம் முதலாவது செய்தியிதழை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

**ராஜி சண்முகம்**

**தலைமை ஆசிரியை**

**கேரி தமிழ்ப்பள்ளி**


© Cary Tamil School, 2015

# முதற் காலாண்டுப் பரீட்சையில் கேரி தமிழ்ப்பள்ளி செயற்பாடு

பின்வரும் வரைபடம் மொத்தப் பாடசலையின் காலாண்டுத் தேர்வு முடிவுகளை காட்டுகிறது. இதிலிருந்து கேரி




தமிழ்ப்பள்ளியின் பெரும்பாலான மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளதோடு ஒரு சில மாணவர்களே சற்று முன்னேற்றம் செய்ய வேண்டும் என்பதும் தெளிவாக இருக்கிறது.

ஆசிரியர்கள் இதனை முன்னிறுத்தி பாடசாலை மற்றும் பெற்றோரின் உதவியுடன் முன்னேற்றம் தேவைப்படும் மாணவர்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

## அங்கீகாரம்

அங்கீகாரம் பெறுதல் என்றால் என்ன அது ஏன் கேரி தமிழ்ப்பள்ளிக்கு முக்கியமானது?

அங்கீகாரம் பெறுதல் என்பது பள்ளியொன்றின் பாடங்கள், வகுப்புகள், பாடமுறைகள் ஆகியவற்றின் தரத்தினை அளவிட்டு அவை வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு உட்படுவதை உறுத்திப்படுத்தும் செயலாகும்.

அங்கீகாரம் பெறுவது தரத்தினை நிர்ணயிப்பது மட்டுமல்லாது, ஒரு பள்ளியின் தகுதியை மற்ற அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளோடு ஒப்பிட்டு, தரத்தினை மேலும் உயர்த்தவும் வாப்பளிக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளோடு நாமும் இணைவதால் நம் பள்ளி மாணவர்கள் தாங்கள் பெறும் மதிப்பெண் மற்றும் கல்வி இருப்புகளை மாற்றம் (credits transfer) செய்ய இயலும்.

உலகின் மிகப்பெரிய கல்வி வல்லுநர் மன்றம், "அட்வான்ஸ்எட் (AdvanceEd)" நூறாண்டுகளுக்கும் மேலாக பள்ளிகளின் செயலாட்சியை தெரிவு செய்து அங்கீகாரச் சான்றிதழ் வழங்கி வருகிறது. கேரி தமிழ்ப் பள்ளியைச் சார்ந்த ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் அடங்கிய குழு, அட்வான்ஸ்எட் நிறுவனத்துடன் கடந்த பல மாதங்களாக இணைந்து செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அனைவரது விடா முயற்சியின் பலனாக, வரும் சித்திரை மாதமளவில், அந்நிறுவனம் நமது பள்ளியை ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்கவுள்ளது. கேரி தமிழ்ப் பள்ளியானது சீராக வளர்ந்து வருவதால், அங்கீகாரமானது தரமான கல்வியை மேலும் உறுதிசெய்யும்.

### தமிழ்மொழி கற்க மாணவர்களுக்கு உபயோகமான சில இணையத்தளங்கள்

- www.tamilvu.org
- http://www.southasia.sas.upenn.edu/tamil
- www.noolagam.com
- www.tamilacademy.com
- http://useful.tamilpriyan.com/learn-tamil.html
- http://www.quora.com/What-are-the-most-effective-ways-to-learn-Tamil-at-home
- http://dictionary.tamilcube.com


### செய்தியிதழ் குழுவிற்கு விசேட நன்றிகள்

காசி அழகானந்தம்
தி.வெ. ராமசுப்ரமணியன்
செல்வன் பச்சமுத்து
இரவி சண்முகம்
ரம்யா வரதராஜன்
லலிதா சண்முகவேல்
கார்த்திகேயன் நாகலிங்கம்
வெங்கட் சுப்ரமணியன்
குரு குருபரன்
நாகலிங்கம் சிவயோகன்


© Cary Tamil School, 2015

© Cary Tamil School, 2015

## கேரி தமிழ்ப் பள்ளியின் 2014-15 (10 ஆவது அணி) ஆசிரியர்களின் புகைப்படம்

